## முதலமைச்சரின் தொடர் முயற்சிக்குக் கிட்டிய வெற்றி!

# ‘சேலம் உருக்காலை புனரமைக்கப்படும்’ - ஒன்றிய அமைச்சர் குமாரசாமி உறுதி!

## புதுடெல்லி பேட்டியில் – நாடாளுமன்ற தொழில்துறை நிலைக்குழுவின் தலைவர் திருச்சி சிவா தகவல்!

**புதுடெல்லி, நவ. 30- புதுடெல்லியில் நேற்று செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற தொழிற்துறை நிலைக்குழுவின் தலைவருமான திருச்சி சிவா, “தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொடர் முயற்சிக்கு வெற்றி கிட்டியுள்ளது” “சேலம் உருக்காலை புனரமைக்கப்படும்” என, ஒன்றிய கனரகத் தொழில்கள் துறை அமைச்சர் குமாரசாமி உறுதியளித்துள்ளார்'' என்று குறிப்பிட்டார்.**

புதுடெல்லியில் நாடாளுமன்ற மாநிலங்களவை கழகக் குழுவின் தலைவர் திருச்சி சிவா எம்.பி. அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:

நாடாளுமன்ற தொழில்துறை நிலைக் குழுத் தலைவர் என்ற முறையில் கனரக மற்றும் எஃகு துறையின் அமைச்சர் குமாரசாமி அவர்களை இன்று காலையில் நான் சந்தித்து பேசிக் கொண்டிருந்தேன். பல்வேறு பிரச்சினைகள் பற்றி பேசியபோது, அவர் நமக்கு ஒரு மிக நல்ல வாக்குறுதியை தந்திருக்கிறார். சேலம் உருக்காலை விரைவில் புனரமைக்கப்படும். அதற்கு என்று நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒரு பெரிய அச்சம் உருவாகியதைப்போல, அந்தத் தொழிற்சாலை மூடப்படும் என்ற நிலையில் நலிவடைந்து கொண்டிருக்கிறது என்றெல்லாம் செய்திகள் வந்தன. தமிழக முதலமைச்சர் அவர்கள்கூட இதுகுறித்து தொடர்ந்து, ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி வந்தார். அது மூடக்கூடாது என்று; அது புனரமைக்கப்படும் வேண்டும் என்று; இன்றைக்கு அவர் சொன்ன மிக நல்ல செய்தி என்பது, விரைவில் அமைச்சரவையின் ஒப்புதல் பெற்று, அது அறிவிக்கப்படும்.

### மகிழ்ச்சிகரமான செய்தி!

சேலம் தொழிற்சாலை மூடப்படாது, அது புனரமைக்கப்படும் என்பதோடு, செயில் நிறுவனம் ஒரு மிகப்பெரிய நிறுவனம் கிட்டத்தட்ட சேலம் தொழிற்சாலையோடு இணைந்ததுதான். அதுவும் நலிவடைந்து கொண்டிருந்தது. அதையும் சற்றேறக்குறைய Disinvestment செய்வார்கள் என்றெல்லாம்கூட செய்திகள் வந்தது. அதுவும் புனரமைக்கப்படும் என்று அவர் சொன்னார். எனவே, இந்த இரண்டும் தமிழகத்திற்கு கிடைக்கும் மிக மகிழ்ச்சிகரமான செய்தி.

அத்தோடு, ஏற்கனவே அதுபற்றியும் பேசினோம். சேலத்தில் Burn Standard என்று ஒரு சுரங்க தொழிற்சாலை இருந்தது. அது மேக்னசைட் என்கிற மூலப்பொருளை சுரங்கத்திலிருந்து எடுக்கும் ஒரு இடம். சற்றேறக்குறைய 1,500 ஏக்கர் பரந்து விரிந்து இருக்கின்றது. கொல்கத்தாவில் இருந்த Burn Standard நலிவடைந்து மூடப்பட்ட நிலையில், சேலத்தில் இருந்த Burn Standard மூடப்படும் என்ற செய்தி வந்தபோது, நான் அப்போதும் நிலைக் குழுத் தலைவராக இருந்தேன். அந்த அடிப்படையில் செயில் நிறுவனத்தின் தலைவரை நேரடியாக அழைத்துச் சென்று, இவ்வளவு பெரிய இடம் வீணாகக் கூடாது. தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்று சொன்னதைக் கேட்டு, அந்தத் சுரங்கத் தொழிற்சாலையை முழுமையாக சுற்றிப் பார்த்துவிட்டு, பின்னர் செயில் அதை subsidiary unit என்று எடுத்துக் கொண்டது. இன்றைக்கு மூடப்படும் நிலையிலிருந்த அந்த தொழிற்சாலை, இன்றைக்கு 80 கோடிக்கு மேல் லாபம் ஈட்டிக் கொண்டிருக்கிறது. அதில் இருக்கும் Executive என்ற பொறுப்பில் இருக்கும் அதிகாரிகள் 1995 ஊதிய முறையில் பெற்றுக்கொண்டிருந்தவர்கள், இப்போது 2017 என்று பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதே போன்று, அதிகாரிகளாக இல்லாதவர்கள் 2012 என்பதை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது இப்போது பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, தொழிலாளர்களின் வாழ்வு அங்கே பாதுகாக்கப்பட்டு இருக்கிறது, என்பதோடு தமிழகத்தில் இருந்த ஒரு தொழிற்சாலை பாதுகாக்கப்பட்டு, ஒன்றியத்தின் பக்கமாக இருக்கும் பொதுத்துறை நிறுவனம் இப்போது லாபகரமாக இயங்குகிறது என்பதும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. இது ஏற்கனவே எங்கள் குழுவின் தலையீட்டின் காரணமாக நடந்தது.

இன்றைக்கு கிடைத்த மிக மகிழ்ச்சிகரமான செய்தி, நம்முடைய சேலம் உருக்காலையில் பணியாற்றுகிறவர்கள் எல்லாம் மிகுந்த அச்சத்தோடு இருந்து கொண்டிருந்தார்கள். முதலமைச்சரின் தொடர் முயற்சியின் காரணமாக, இன்றைக்கு ஒன்றியத்திலிருந்து இந்த பதில் நமக்கு கிடைத்திருப்பது மிகவும் சிறந்த ஒன்று. அமைச்சரவை ஒப்புதல் கிடைத்தவுடன் அது முறையாக பணிகள் தொடங்கப்படும்.

### வதந்திகள்

**கேள்வி:** சேலம் உருக்காலையை புனரமைக்கப்பட வேண்டும் என்று பல காலகட்டங்களில் தொடர்ந்து தி.மு.க. வலியுறுத்தி வந்தது. அதற்கான வெற்றியாக இது இருக்குமா?

**பதில்:** நிச்சயமாக... முதலமைச்சர் ஏதோ கடமைக்கு என்று இல்லாமல், அதைத் தீவிரமாக பல்வேறு முனைகளில் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். நாங்களும் நாடாளுமன்றத்தில் அதைப் பேசியிருக்கிறோம். தனிப்பட்ட முறையிலும் என் போன்றோர் சந்தித்து அமைச்சரிடம் முறையிட்டு இருக்கின்றோம். ஆனால் அது இழுவையிலேயே இருந்தது. சற்றேறக்குறைய ஒரு உச்சகட்டமாக அது இருக்காது, அது மூடப்படும் என்றெல்லாம்கூட வதந்திகள் பரப்பப்பட்டன. இந்திய நாட்டில் பொதுவாக பொதுத்துறை நிறுவனங்கள் மெல்ல மெல்ல மூடப்பட்டு கொண்டிருக்கின்றன. குறிப்பாக, கனரகத் தொழிற்சாலைகள். அதில் மீண்டும்இதுபுதுப்பிக்கப்படுகின்றது எனும்போது, என்னுடைய தலைமையிலான இந்த தொழில்துறையின் நிலைக் குழு தலையிட்டு, பல விஷயங்களில் பலவற்றிற்கு தேவையானதை கொண்டு வந்திருக்கின்றன.



சென்னையில் இருக்கும் எம்.ஆர்.எஃப் என்று இருந்த ஒன்று. இப்போது அது பெயர் மாறி CPCL என்று இருப்பது. அதுபோல, அஸ்ஸாமில் இருந்த ஒரு காகிதத் தொழிற்சாலை. கேரளாவில் இருந்து ஒரு ஃபேக்ட் போன்றவற்றிற்கு எல்லாம் இப்போது நிறைய செய்து முயற்சித்தோம். இப்போது கிடைத்திருக்கும் நமக்கு மிக முக்கியமான செய்தி, தமிழக முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான தளபதி அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் தொடர் முயற்சியினால், இன்றைக்கு இந்த நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. காலையில் அமைச்சரோடு பேசிய போது, எனக்கு மிக மகிழ்ச்சி தருவதாக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் விட்டு வந்திருக்கின்றேன். அதாவது இந்தச் செய்தியை நீங்கள் சொல்லலாம் என்றும் சொன்னார். விரைவில் அமைச்சரவை ஒப்புதல் பெற்றவுடன் அது நமக்கு நடைமுறைக்கு வரும். சேலம் வாழ் மக்களுக்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கு கிடைத்த ஒரு மிகப்பெரிய நல்ல செய்தி இது.

**கேள்வி:** நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரை, இன்றைக்கு நான்காவது நாளாக முடங்கி இருக்கிறது. நீங்களும் தொடர்ந்து நோட்டீஸ் கொடுக்கிறீர்கள். மாநிலங்கள் தலைவரும்தொடர்ந்துநிராகரித்துக் கொண்டிருக்கிறார். திங்கள் கிழமையாவது நடக்குமா நாடாளுமன்றம்?

**பதில்:** அதாவது. நாங்கள் சில முக்கியமான பிரச்சினைகள் கொடுத்து, நாங்கள் தீர்மானங்கள் தருகின்றபோது, அது குறித்து கருத்தாவது கேட்க வேண்டும். தொடர்ந்து நாங்கள் இதை வலியுறுத்துகிறோம் என்கிறபோது, அரசுத் தரப்பில் இருந்து யாராவது ஒருவர் பொறுப்பேற்று, பொறுப்பான அமைச்சர் பிரதம அமைச்சர் உள்துறை அமைச்சர் அல்லது அவைத் தலைவர் என்று இருக்கும் சுகாதாரத்துறை அமைச்சர் நிதித்துறை அமைச்சர் யாரோ ஒருவர் ஒரு அறிக்கை தருவார்களா? பதில் சொல்வார்களா? என்றால், யாருமே எழுந்துகூட நிற்பதில்லை. எனவே, இந்தப் பிரச்சினைகளை எல்லாம் அவர்கள் பொருட்படுத்தவில்லை.

### உயிர் பயத்தில் வாழும்’ மணிப்பூர் மக்கள்!

அதானி குழுமத்தின் மீது வந்திருக்கும் குற்றச்சாட்டு. முதலில் ஹிண்டன்பர்க், இப்போது அமெரிக்காவின் நீதிமன்றமே சொல்லியிருக்கிறது. அடுத்து, மணிப்பூரில் ஓயாத கலவரம். ஒவ்வொரு நாளும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அங்கிருக்கும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காடுகளில் பதுங்கி வாழ்கிறார்கள். 250 உயிர்கள் பறிக்கப்பட்டுவிட்டன. வீடுகளை இழந்து, வாழ்விழந்து, குழந்தைகளுக்கு பள்ளிக்கூடமே திறக்கப்படாமல் பதுங்கி இருக்கும் ஒரு பயங்கரமான நிலையில், கொஞ்சம்கூட பதட்டடே இல்லாமல் ஒரு அரசு அங்கு மாநிலத்திலும் இயங்குகிறது, ஒன்றியத்திலும் இயங்குகிறது எனும்போது, இந்தக் கொடுமையை பரிதாபத்தை வேறு எங்கு சென்று சொல்ல முடியும். தீர்க்க வேண்டிய தீர்வு காண வேண்டிய இடம் என்பது நாடாளுமன்றம். அது தொடர்பாகத்தான் நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு தீர்மானம் கொடுத்தோம்.

அதானி குறித்து சில பேர். மணிப்பூர் தொடர்பாக சில பேர். சம்பலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சினை தொடர்பாக சில பேர் என்று கொடுத்தால், எதற்குமே பதில் இல்லை. முன்பெல்லாம்கூட நாங்கள் அதிக நேரம் கூச்சல் எழுப்புவோம். எங்கள் மீது பழி சுமத்துவார்கள். கடந்த நான்கு தினங்களாக நாங்கள் எழுந்து நின்றாலே போதும், உடனே அவையை ஒத்தி வைத்துவிட்டு செல்கிறார்கள்.

### ஒன்றிய அரசாங்கம் எந்த குரலையும் மதிப்பதில்லை

நாடாளுமன்றம் என்பது இரு தரப்பு கருத்துக்களை பேசி – கலந்துரையாடி விவாதித்து ஒரு முடிவுக்கு தீர்வுக்கு வர வேண்டிய இடம் என்ற நிலை எல்லாம் இப்போது சுத்தமாக இல்லை என்பது வேதனைக்குரிய ஒன்று. நாடாளுமன்றத்தில் நம்முடைய ஜனநாயகம் என்பது கேள்விக்குறி என்பதை நான் பல தடவைகளாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். அரசாங்கம் எந்த குரலையும் மதிப்பதில்லை. அவைத் தலைவரின் ஒலிப்பெருக்கியோ, ஆளுங்கட்சியின் ஒலிபெருக்கியோ மட்டும்தான் வேலை செய்யும். அவர்கள் சொல்வதெல்லாம் வெளியே செல்லும். நாங்கள் என்ன சொன்னாலும், அந்த செய்தியோ நியாயமோ மக்களுக்கு சென்று சேருவதில்லை. எங்கள் ஒலிபெருக்கி வேலை செய்யாது. கேமரா எங்கள் பக்கம் திரும்பாது.

**கேள்வி:** கர்நாடகா முதலமைச்சர் பிரதம மந்திரியை சந்தித்தபோது மேகதாது குறித்து வலியுறுத்தி இருக்கிறார். அது கட்டுவது போன்று இறுதிக் கட்டத்திற்கு வந்திருக்கிறது?

**பதில்:** தமிழகத்திற்கு மக்கள் தமிழகத்தின் நலன் கருதி எதையெல்லாம் செய்ய வேண்டுமோ எந்தெந்த வகையில் செய்ய வேண்டுமோ யாரிடமெல்லாம் பேச வேண்டும், அதையெல்லாம் தமிழக முதலமைச்சர் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு செய்து கொண்டிருக்கிறார். அதுபோல, மேகதாது பிரச்சினையிலும் தமிழகத்திற்கு பாதிப்பு இல்லாத நிலைமையை உருவாக்க, நிச்சயமாக நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் நிச்சயமாக அனைத்து காரியங்களையும் செய்து, நல்ல செய்திகளை நல்ல முடிவுகளைத்தான் நமக்கு பெற்றுத் தருவார்கள்.

**கேள்வி:** நாடாளுமன்றத்தில் சில தகவல்கள் வெளிவந்திருக்கிறது. நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கே செக்யூரிட்டிகள் மூலமாக பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கிறார்கள். அவர்கள் மூலமாக அழுத்தம் கொடுக்கிறார்கள். அது குறித்து?

### பறிக்கப்படும் பத்திரிகையாளர்களின் உரிமைகள்!

**பதில்:** அதாவது, முன்பெல்லாம் எங்களுக்கு இருந்த மரியாதை சுதந்திரம் என்பது சங்கடமாகத்தான் இருக்கிறது. ஏதோ பொது வெளியில் நடப்பது போன்று பேரிக்கேட் போட்டு, ஒரு குறிப்பிட்ட இடத்தில் காரை நிறுத்துவது, இறங்கிச் நடக்கச் சொல்வது, பத்திரிக்கையாளர்கள் ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் ஒரு எல்லையைத் தாண்டி வரக்கூடாது என்று நிர்ணயித்திருப்பது சில குறிப்பிட்ட ஊடகங்கள் மட்டும்தான் உள்ளே அனுமதிக்கப்படும். அதில் அதானியின் ஒரு செய்தி நிறுவனம்கூட இருப்பதாக தகவல்.

இப்படிப்பட்ட நிலையில், இன்றைக்கு நான் ஒருவரோடு இது போன்று தேசிய அளவிலான ஊடகத்திற்கு நேரடி ஒளிபரப்பு செய்து கொண்டிருந்தபோது, குறுக்கே வந்து அவரை நகரச் சொல்லி, அங்கே நிற்கக் கூடாது என்ன சொன்னபோது, எனக்கேகூட சற்று கோவம் வந்தது. நான் சொன்னேன், “இப்படி எல்லாம் எங்களை பொது வெளியில், ஏதோ சட்டம்ஒழுங்கு கெட்டுவிட்டதைப்போல, இத்தனை பேரை குவித்துவைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை நடத்துவது என்பது ஏற்புடையதல்ல” என்று சொன்னேன். பின்னர் ஒதுங்கிக் கொண்டார்கள்.

ஆனால், இதே நிலை தொடர முடியாது. நான்காவது தூண் என்று சொல்லப்படும் பத்திரிக்கையாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இந்த நாட்டின் உச்சகட்ட மன்றத்தின் உறுப்பினர்களாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களுடைய வளாகத்திலேயே சுதந்திரமாக நடமாட முடியவில்லை என்றால், இதற்கெல்லாம் விரைவில் தீர்வு காணப்படும். நாங்கள் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு திருச்சி சிவா பேட்டியளித்தார்.

---

### கணினித் தமிழ் வளர்ச்சிக்கு சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்கள்

# முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்!

## தமிழ் வளர்ச்சித் துறை அறிவிப்பு!

சென்னை, நவ.30- பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புக்களைக் கொண்டு, சீரிளமையோடு இயங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும்தமிழ்த்தாயின்திருத்தொண்டர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் அளித்து, அவர்தம் தொண்டுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து வருகின்றது.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப, உலகமெலாம் கணினி வழித் தமிழ் மொழி பரவச் செய்யும் வகையில் கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருள் உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக முதலமைச்சர் கணினித் தமிழ் விருது என்ற பெயரில் விருது வழங்கப்பட்டு வருகிறது. விருது பெறுபவருக்கு விருதுத் தொகையாக ரூபாய் 2 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கப்படுகிறது.

2024ஆம் ஆண்டுக்குரிய முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுக்கு தனியர் மற்றும் நிறுவனத்திடமிருந்து, தமிழ் வளர்ச்சிக்கான மென்பொருள்கள்/செயலிகள் வரவேற்கப்படுகின்றன. விருதுக்கு அனுப்பப்படவுள்ள மென்பொருள்கள் 2021, 2022, 2023ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இவ்விருதுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைத் தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் (www. tamilvalarchithurai.tn.gov.in) இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை 600 008 என்ற முகவரிக்கு அஞ்சல் வாயிலாக 31.12.2024 ஆம் நாளுக்குள் விண்ணப்பங் களை அனுப்பிட வேண்டுகின்றோம். தக்க ஆவணங்களோடு விண்ணப்பங்கள் அமைதல் விரும்பத்தக்கது.

கூடுதல் விவரமறிய விரும்புவோர் 044 28190412, 044 - 28190413 ஆகிய தொலைபேசி எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். உரிய நாளுக்குள் (31.12.2024) பெறப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை நினைவிற் கொள்ள கனிவுடன் வேண்டுகின்றோம்.

---

### சென்னை வடக்கு மாவட்டம்

# அணி அமைப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

27.11.2024 அன்று முரசொலியில் வெளி வந்த சென்னை வடக்கு மாவட்ட அணி அமைப்பாளர்கள் நியமன அறிக்கை தலைமைக் கழகத்தால் நிறுத்திவைக்கப்பட்டு, தலைமைக் கழகம் நடத்திய விசாரணையின் அடிப்படையில்:

மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளரான **திரு. கார்த்தி செங்குட்டுவன்** அவர்களும்;

மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளரான **திரு. பி. பிரகாஷ்** அவர்களும்;

மாவட்ட கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை அமைப்பாளரான **திரு.கோ.சதிஷ் (எ) ராஜசேகர்** அவர்களும்;

மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளரான **திரு. ஜி.எஸ். முருகன்** அவர்களும்,

ஏற்கனவே வகித்து வந்த பொறுப்பில் தொடர்ந்து கழகப் பணியாற்றிட அனுமதிக்கப்படுகிறார்கள்.

மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் பி.சதீஷ்குமார் அவர்கள், அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, திரு. **வி.வி.ரமேஷ்** (தண்டையார்பேட்டை, சென்னை-81) அவர்கள் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜே. காணிக்கைநாதன் அவர்கள், அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, **திரு.த.சிவராம்,** (வியாசர்பாடி, சென்னை -39) அவர்கள் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.கோவிந்தசாமி அவர்கள், அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப் பட்டு, **திரு. பி.செந்தில்குமார்** (வண்ணாரப் பேட்டை, சென்னை-21) அவர்கள் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எஸ்.சண்முகம் அவர்கள், அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, **திரு.ஆ.மோகன்** (கொருக்குப்பேட்டை, சென்னை-21) அவர்கள் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு தலைவர் சி.தமிமுன் அன்சாரி அவர்கள், அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, **திரு.மு.சாகுல்மீரான்** (இராயபுரம், சென்னை-13) அவர்கள் மாவட்ட சிறுபான்மை நலஉரிமைப்பிரிவுதலைவராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகிகளுடன் அந்தந்த மாவட்ட அணி நிர்வாகிகள் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.11.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

### தமிழ்நாட்டில் நிலுவையில் உள்ள

# ரெயில்வே திட்டங்களைச் செயல்படுத்த நிதி ஒதுக்கப்படுமா?

## மக்களவையில் - டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

*புதுடெல்லி, நவ. 30- தமிழ் நாட்டில் நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்களை விரைவில் செயல்படுத்த போதுமான நிதியை ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ளதா என்று மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.*

*அவர் எழுப்பிய கேள்விகள் வருமாறு:-*

*தமிழகத்தில் நிலுவை யில் உள்ள மற்றும் செயல்படுத்தி வரும் ரயில்வே திட்டங்களுக்கு ஒன்றிய அரசு போதுமான நிதியை வழங்கியுள்ளதா?*

*அப்படியானால், அதன் விவரங்கள்?*

*தமிழகத்தில் ஐந்து ஆண்டு களுக்கும் மேலாக நிலுவையில் உள்ள ரயில்வே திட்டங்களை உரிய காலத்தில் முடிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படி யானால், அதன் விவரங்கள்? இல்லை என்றால் அதற்கான காரணங்கள்?*

*நிலுவையில் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?*



*இதற்கு இரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம்:*

*இந்திய இரயில்வேயின் திட்டங்கள் மண்டல இரயில்வே வாரியாக அனுமதிக்கப்பட்டு எடுக்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் ரயில்வே திட்டங்கள் தெற்கு இரயில்வே (SR), தென் மத்திய இரயில்வே (SCR) மற்றும் இந்திய இரயில்வேயின் தென் மேற்கு இரயில்வே (SWR) மண்டலம் ஆகியவற்றால் உள்ளடக்கப் பட்டுள்ளன.*

*இரயில்வே திட்டங்களின் நிதி ஒதுக்கீடு மற்றும் திட்ட வாரியான செலவுகள் மற்றும் மண்டல ரயில்வே வாரியான விவரங்கள் இந்திய ரயில்வே இணைய தளத்தில் பொதுத்த ளத்தில் கிடைக்கின்றன.*

*2014 முதல் தமிழ்நாடு மாநிலத்தில் நிதி ஒதுக் கீட்டில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது:*

*இது 2009-14ன் சராசரி ஒதுக்கீடு ஆண்டுக்கு ரூ.879 கோடியாக இருந்தது.*

*தமிழ் நாட்டில் உள்ள ரயில்வே திட்டங்களை செயல்படுத்த 2023-24 ஆண்டு ரூ.6,080 கோடியும் 2024-25ல் ரூ.6,362 கோடியும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.*

*01.04.2024 நிலவரப்படி, தமிழ் நாட்டில் ரூ. 33,467 கோடி செலவில் 22 ரயில்வே உள்கட்டமைப்பு திட்டங்கள் (10 புதிய பாதை, 03 கேஜ் மாற்றம் மற்றும் 09 ரயில் பாதை இரட்டிப்பு) மொத்த நீளம் 2,587 கி.மீ. செயல்படுத்தப் பட்டு வரும் பணிகள் வெவ்வேறு கட்டங்களில் உள்ளன.*

*மார்ச் 2024 வரை செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பார்க்கையில் 2587 கி.மீ. அளவில் 22 ரயில்வே கட்டுமான திட்டங்களில் ரூ. 7,153 கோடியில் 665 கி.மீ. அளவு, செயல் படுத்தப்பட்டு ள்ளது. மீதமுள்ள 1922 கி.மீ. அளவு திட்டப்பணிகள் செயல் படுத்த வேண்டும்.*

*இரயில்வே நிலத்தை மாநில அரசு மூலம் கையகப் படுத்துகிறது. மாநில அரசு இழப்பீட்டுத் தொகையை மதிப்பீடு செய்து ரயில் வேக்கு அறிவுறுத்துகிறது. மாநில அரசின் கோரிக்கையின் பேரில், ரயில்வே இழப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட மாவட்ட நிலம் கையகப்படுத்தும் ஆணையத்திடம் டெபாசிட் செய்கிறது.*

*இவ்வாறு அவர் பதிலளித்தார்.*

---



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.விநாயகமூர்த்தி தலைமையில் அடையாறு மகப்பேறு மருத்துவமனையில் 27.11.2024 அன்று பிறந்த ஏழு குழந்தைகளுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தங்க மோதிரம் அணிவித்து தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கான தொகுப்பை வழங்கினார். மேலும் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த 30 க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்குமான தொகுப்பு வழங்கினார். மருத்துவமனையில் பணிபுரியும் அனைத்து மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் உதவியாளர்கள் அனைவருக்கும் புடவைகள் வழங்கப்பட்டது. இதில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, பகுதிச் செயலாளர் துரை கபிலன், மாமன்ற உறுப்பினர்கள் எம்.ராதிகா, சுபாஷினி, வட்டச் செயலாளர்கள் பெ.ராஜ், வி.எம்.டி. ராஜா ரமணன், கா.கணேஷ்குமார், மா.தமிழரசு, தனசேகர் மற்றும் தா.செல்வம், ஆ.ச.ஸ்ரீகாந்த், ரவி கிருஷ்ணன், சி.சுரேஷ், சின்னத்தம்பி மற்றும் கழக பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர் கலந்து கொண்டனர்.